**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **CC513/2004** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for | Prosecution : | **PW - 50** |
| | Defence : | |
| | Court : | |

| | | |
|---|---|---|
| Name | : | ஹரிபிரகாஷ் |
| Father's / Husband Name | : | பலராமன் |
| Village | : | 357, 5வது தெரு, பிலோமினாள் நகர், நாஞ்சிக்கோட்டை ரோடு, தஞ்சாவூர். |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2018 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2018**

**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி.கண்ணகி (பெஞ்ச் கிளார்க்)படி நிலை 3, தட்டச்சர் ச.சுரேஷ்**

**CC513/2004** Date: 25.09.2018

முதல் விசாரணை

நான் நம்பர் 357, 5வது தெரு, பிலோமினாள் நகர், நாஞ்சிக்கோட்டை ரோடு, தஞ்சாவூர் என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அசா1ஐ தெரியாது. 1வது எதிரியை தெரியும். வழக்கின் மற்ற எதிரிகளை தெரியாது. கடந்த 1999ஆம் ஆண்டு எனது அப்பா எனது பெயரில் காமதேனு சிறுசேமிப்பு திட்டத்தில் தஞ்சாவூர் காசிக்கடைத்தெருவில் உள்ள கணபதி ஜுவல்லரி என்ற கடையில் காமதேனு சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து மாதம் ரூபாய் 150ஐ செலுத்தி வந்தேன். மொத்தம் 25மாதங்கள் அதில் 24மாதங்கள் செலுத்தினேன். அதில் மொத்தம் ரூபாய் 3600- செலுத்தியிருந்தார். மேலும் எனது தம்பி மனோகரன் பேரில் எனது அப்பா அதே நகைக்கடையில் விஸ்வ ரூபா சேமிப்பு திட்டத்தின் கீழ் மாதம் ரூ.200வீதம் 20மாதங்களில் 17மாதம் கட்டியுள்ளார். அதில் மொத்தம் ரூபாய் 3400 செலுத்தியிருந்தார். கடைசி தவணை செலுத்துவதற்காக சென்று பார்த்தபோது நகைக்கடை பூட்டி சீல் வைக்கப்பட்டிருந்தது. அங்கு அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் விசாரித்தபோது 1வது எதிரி ஏமாற்றிவிட்டதாக கூறினார்கள். பின்னர் நானும், என்னுடன் பணம் செலுத்தியவர்களும் சேர்ந்து ஆய்வாளரிடம் புகார் அளித்தோம். என்னிடம் காட்டப்படும் பணம் செலுத்தியதற்கான பாஸ் புத்தகம் எண் 190ஆகும். அது சா.பொ.89ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

தஞ்சாவூர் காசுக்கடைத்தெருவில் கணபதி ஜுவல்லரி என்ற கடையே இல்லையென்றாலும், காமதேனு சிறுசேமிப்பு திட்டம் என்ற திட்டமே இல்லையென்றாலும், நான் முன்விசாரணையில் சொல்லியுள்ளவாறு மேற்படி திட்டத்தில் சேரவே இல்லையென்றாலும், அதே போல் தொகை எதுவும் செலுத்தவில்லையென்றாலும் சரியல்ல. சா.பொ.89 இவ்வழக்கிற்கு சம்மந்தப்படாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. நான் மாவட்ட குற்றப்பிரிவு போலீசாரிடம் எழுத்துப்பூர்வமாக புகார் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலீசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் முன் விசாரணையில் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மற்றும் எனது தம்பி பெயரில் பணம் செலுத்தியதற்கு எந்த ஆவணமும் போலீசார் வசம் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அதன் நகல் என்னிடம் இருக்கிறது.

மறு விசாரணை

இல்லை.